(ஆ) வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ. டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1991 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகம் என்ற அந்தப் பெயரை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் ஒரு தவறான நோக்கத்தோடு . . . . . (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவ்வளவு தான் ; ஏன் அதற்கு மேலே போகிறீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு திரு. இராதா அவர்கள் இங்கே சொல்லும்போது, எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தினுடைய பெயரை மாற்ற வேண்டும் என்பதற்காக இந்தத் திருத்தம் வருவதாகச் சொல்கிறார். பத்திரிகையிலே வரும்போது, ஏதோ குறுகிய நோக்கத்தோடு, பெயர்களை

1991 சனவரி 22] டாக்டர் மு. கருணாநிதி

மாற்ற வேண்டுமென்று ஒரு சாதாரண மனப்பான்மையோடு இந்த அரசு நடந்து கொள்வதாக யாராவது தவறாகக் கருதக்கூடும். அந்தப் பெயரையே மாற்றுவதாக இல்லை. —எப்படி ஜி.டி. நாயுடு பெயர்—தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டப் பட்டதோ, அதுபோலத்தான் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் என்றும் பெயர் சூட்டப்படுகிறது.

ஏற்கெனவே மதுரையில் இருக்கின்ற பல்கலைக் கழகத்திற்கு "மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்" என்று முன்பு மதுரை என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. எனவே டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் என்ற பெயர் நிச்சயமாக மாற்றப்படவில்லை, மாற்றப்படமாட்டாது.

11-00 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே உறுப்பினர்கள் ஆரம்ப நிலையில் எதிர்க்கிறேன் என்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். உள்ளே போனால் வாதத்தில் ஆரம்பித்து பின்னர் பிரச்சினைகள் எல்லாம் வரும். ஆகவே எல்லோரும் மரபுகளைப் பின்பற்ற வேண்டும். எதற்கெடுத் தாலும் சொற்பொழிவு ஆற்றினால் பிறகு வரம்பே இருக்க முடியாது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"1991 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ **சிகாமணி** : இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. இரண்டாம் துணை நிதிநிலை அறிக்கை, 1990-91 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990—91ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளைவிளக்கிக் கூறும் விரிவான அறிக்கை